# பகிரங்க அறிவித்தல்

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

### சாரதி (தரம் III) வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் சாரதி தரம் III பதவிகளில் நிலவும் 02 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. சாரதி - தரம் III

**ஆட்சேர்ப்புத் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

(I) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் (02) ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(II) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வாகனம் செலுத்துதல் தொடர்பில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

(I) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வாகனம் செலுத்துதல் தொடர்பில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(II) ஆரம்ப மட்ட அரைத் தேர்ச்சி **(PL 2)** அல்லது ஆரம்ப மட்ட தேர்ச்சி அற்ற **(PL 1)** சேவை வகுதியொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவுத்திட்டம் :

**PL 3 – 2025 - ரூ. (43,280-10x490-10x540-10x590-12x630- 67,040)**
(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் **01/2025** இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்)

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(I) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(II) பதவிக்குக் கையளிக்கப்படும் பணிகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் ஏற்றவாறு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(III) நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(IV) பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

(V) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தற்றதுமான பதவியாகும். நியமனதாரிகள் ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும். தொழில் தருநரிடமிருந்து 12% ஆகும். ஊழியரிடமிருந்து 8% ஆகும். ஆணைக்குழுவினால் நியமனதாரியின் சம்பளத்தில் 3% இற்கு சமனான தொகையொன்று ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்படும்.

(VI) பதவிக்கு நியமனம் பெறும் ஒருவர் 03 வருட தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உட்படுவார். அவரது சேவை வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருப்பின் மற்றும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் தகுதிகூர் நிலைக் காலத்தின் இறுதியில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முறை :**

இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2025.12.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். 2025.12.05 ஆம் திகதிக்குப் பின்னர் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.)

இந் நியதிகளுக்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி** : தவிசாளர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ‘‘ஜனஜயசிட்டி’’ கட்டடத்தொகுதி, 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரிய

**தவிசாளர்,**
**அரசகரும மொழிகள் ஆணைக்குழு,**
**2025.11.21**